# சுற்றுலாத்துறை
# கலை பண்பாட்டுத்துறை
# அருங்காட்சியகங்கள் துறை
# தொல்லியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.29

அறிவிப்புகள்

2011 - 2012

# சுற்றுலாத்துறை

# அறிவிப்புகள்
# 2011–2012

## 1. ஸ்ரீரங்கத்தில் கலையரங்கம் கட்டுதல்

108 திவ்ய தேசங்களில் முதலிடம் வகிக்கும் ஸ்ரீரங்கத்தில் உள்ள அரங்கநாதர் கோவிலுக்கு வரும் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.5 கோடி மதிப்பில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு நவீன கலையரங்கம் கட்டப்படும்.

## 2. ஸ்ரீரங்கத்தில் நிழற்குடை அமைத்தல்

திருச்சிராப்பள்ளி காவிரியாற்றின் கரையில் அம்மா மண்டபத்தில் இருந்து ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோவில் வரை பக்தர்கள் வெயில் மற்றும் மழைக் காலங்களில் சிரமமின்றி கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்வதற்கு வசதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒரு கோடி ரூபாய் மதிப்பில் நிழற்குடை அமைக்கப்படும்.

## 3. உதகமண்டலம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா வரவேற்பு மையங்களை மேம்படுத்துதல் மற்றும் திருவண்ணாமலையில் புதிய சுற்றுலா வரவேற்பு மையம் ஒன்றை துவக்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக உதகமண்டலத்தில் இயங்கும் சுற்றுலா வரவேற்பு மையத்தில் ரூ.20 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், யுனெஸ்கோ (UNESCO) அமைப்பால் உலகப் பாரம்பரிய மையம் என்று அறிவிக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாமல்லபுரத்தில் உள்ள சுற்றுலா வரவேற்பு மையம், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நவீன வசதிகளுடன் ரூ.30 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

புனிதத் தலமாகவும் பாரம்பரிய நகரமாகவும் விளங்கும் திருவண்ணாமலைக்கு ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று கிரிவலம் செல்வதற்கு இலட்சக் கணக்கில் பக்தர்கள் வருகை புரிகின்றனர். மேலும்,

திருவண்ணாமலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். எனவே, அனைத்து வசதிகளும் கூடிய ஒரு புதிய சுற்றுலா வரவேற்பு மையம் ரூ.32 இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 4. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பழங்கால துறைமுகம் கொற்கையை மேம்படுத்துதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சங்ககாலத் துறைமுகமான கொற்கையில் சுற்றுலாத் தகவல் பரிமாற்ற மையம் மற்றும் அருங்காட்சியகம் ரூ. 35 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

## 5. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலை சிறந்த சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக உருவாக்கப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் வகையில் பல அருவிகள், கோவில்கள், படகு குழாம், தாவரவியல் பூங்கா போன்றவை உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுற்றுலாப் பயணிகளின்

வசதிக்காக இங்கு சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் செய்யப்படும்.

## 6. செட்டிநாடு பாரம்பரியச் சுற்றுலா மேம்படுத்துதல்

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள செட்டிநாடு பகுதியில் உள்ள கலை நயமிக்க அரண்மனைகள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள கோவில்கள் மற்றும் கிராமியக் கலை, பண்பாடு ஆகியவற்றை கண்டுகளிக்க சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். எனவே, செட்டிநாடு பாரம்பரியச் சுற்றுலாவை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காரைக்குடியில் சுற்றுலா வரவேற்பு மையம் ஒன்று அமைக்கப்படும். மேலும், ஒரே நாளில் செட்டிநாடு பகுதியில் உள்ள சிறப்பு வாய்ந்த அனைத்து கோவில்களையும், அரண்மனைகளையும், கிராமியக் கலை பண்பாடு ஆகியவற்றை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட செட்டிநாடு பாரம்பரிய சுற்றுலாச் சுற்று **(Chettinad Heritage Circuit)** ஏற்பாடு செய்யப்படும்.

## 7. விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி, திருச்சுழி மற்றும் திருத்தங்கல் ஆகிய இடங்களில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்

விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவிலுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். அதே போன்று ரமண மகரிஷி பிறந்த இடமான திருச்சுழி மற்றும் வைணவத் தலமான திருத்தங்கல் ஆகிய இடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இங்கு தங்கும் விடுதி, கழிப்பறைகள், தெருவிளக்குகள், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

## 8. நாகப்பட்டினம் மாவட்டத்தில் தரங்கம்பாடியில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்

நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் கடற்கரையில் அமைந்துள்ள டேனிஷ் கோட்டைக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தரங்கம்பாடி கோட்டையை சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் கடற்கரைப் பகுதிகள் ஆகியவற்றில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

## 9. புதுக்கோட்டை மாவட்டத்தில் மணமேல்குடி, ஆவுடையார்கோவில், சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடற்கரையோரம் உள்ள மணமேல்குடி, ஆவுடையார்கோவில் ஆகிய இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை புரிகின்றனர். மேலும், சித்தன்னவாசல் குடைவரைக் கோயிலில் உள்ள சிற்பங்களைப் பார்வையிட அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு போதிய வசதிகளை செய்து தருவதற்காக சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 10. சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மருதுபாண்டியர் நினைவிடம் மற்றும் காளையார்கோவில், திருமலைக் கொழுந்தீஸ்வரர் கோவில், பிரான்மலை ஆகிய இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை புரிகின்றனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இவ்விடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

## 11. குற்றாலத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குற்றாலத்திற்கு ஜுன் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான பருவ காலங்களில் மட்டும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் அருவிகளில் குளிப்பதற்காக வருகின்றனர். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இதர பொழுதுபோக்கு அம்சங்கள் தற்போது குறைவாக உள்ளன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இங்கு

ஆண்டு தோறும் சுற்றுலாப் பயணிகள் வருமளவிற்கு தேவையான பொழுதுபோக்கு அம்சங்கள் அடங்கிய சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், குற்றாலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில், குறிப்பாக சிறப்பு மிக்க சுற்றுலாத் தலங்கள் மற்றும் கோவில்களுக்கு சுற்றுலாப் பயணிகள் சென்று வரத் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்படும்.

## 12. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி மற்றும் முத்துப்பேட்டை பகுதிகளில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள பிரசித்தி மிக்க இராஜகோபாலசுவாமி கோவிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கோவிலுக்கு அருகில் தங்கும் அறை, தெரு விளக்குகள் போன்ற வசதிகள் மேற்கொள்ளப்படும். மேலும், முத்துப்பேட்டை ஒன்றியத்தில் ஜாம்புவானோடை என்ற கடற்கரைக் கிராமத்தில் உள்ள தர்காவிற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மேலும் முத்துப்பேட்டை கழிமுகத்துவாரத்திற்கு (லகூன்)

அருகில் பறவைகள் சரணாலயம் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இந்தப் பகுதியிலும் சுற்றுலாப் பயணிகளுக்காக அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

**13. அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சியில் உள்ள அடைக்கல மாதா திருத்தலம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், மணல் மாதா திருத்தலம் ஆகிய திருத்தலங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்**

அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா திருத்தலத்திற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகில் சொக்கன் குடியிருப்பில் உள்ள அதிசய மணல்மாதா திருத்தலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

## 14. சென்னை அண்ணா நகரில் உள்ள டவர் பூங்காவில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்

சென்னை அண்ணா நகரில் உள்ள டவர் பூங்காவிற்கு சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை அதிக அளவில் தினமும் வருகின்றனர். எனவே, இந்த டவர் பூங்காவிற்கு வரும் பொதுமக்களின் வசதிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் கொண்ட சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 15. தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்

தூத்துக்குடி மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வாழ்ந்த பகுதிகளான ஒட்டப்பிடாரம், கயத்தாறு, பாஞ்சாலங்குறிச்சி, எட்டையபுரம், மணியாச்சி,வல்லநாடு போன்ற இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அங்கு சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு,

சுதந்திரப் போராட்ட வீரர்கள் சுற்றுலாச் சுற்று (Freedom Fighters Circuit) அறிமுகப்படுத்தப்படும்.

## 16. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு குழாம்களுக்கு புதிய படகுகள் வாங்குதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான ஒன்பது படகு குழாம்களில் ஏற்கனவே 513 படகுகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் படகு சவாரி மேற்கொள்ள வருவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 114 பலதரப்பட்ட புதிய படகுகள் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் இந்த ஆண்டில் வாங்கப்படும்.

## 17. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு புதிய சொகுசுப் பேருந்துகள் வாங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஐந்து புதிய குளிர்சாதன வசதி கொண்ட சொகுசுப் பேருந்துகள் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் இந்த ஆண்டு வாங்கப்படும்.

## 18. தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை (Tamil Nadu Tourism Policy) ஒன்று விரைவில் வெளியிடப்படும்.

## 19. சாலையோர வசதிகள் மேம்பாடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் சாலையோரப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தங்கும் வசதி, உணவு, கழிப்பறை வசதிகள் போன்றவை தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்.

## 20. ஆன்மீக சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பிரசித்தி மிக்க ஆன்மீகத் தலங்களான திருக்கடையூர், திருக்கோஷ்டியூர், இராமேசுவரம், பழனி, ஸ்ரீவாஞ்சியம், ஆய்க்குடி மற்றும் நவக்கிரக ஆலயங்கள் உள்ள தலங்களுக்கு வரும் பக்தர்களின்

வசதிக்காக தங்கும் விடுதி, பொருட்கள் வைப்பறை, கழிப்பறை போன்ற வசதிகள் மேற்கொள்ளப்படும்.

**21.** தஞ்சாவூர் மாவட்டத்தில் கல்லணை, தேனி மாவட்டத்தில் வைகை அணை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல் கோவில், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஸ்ரீ ஆண்டாள் கோவில், ஈரோடு மாவட்டம், பவானி சாகர் அணை, நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையம், கோயம்புத்தூரில் தாவரவியல் பூங்கா, கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்தின் கீழ் வால்பாறை, ஆழியாறு அணை மற்றும் டாப் ஸ்லிப் ஆகிய பகுதிகள், மற்றும் மதுரையில் நவீன வசதிகளுடன் கூடிய கூட்ட அரங்கம் (Convention Centre) ஒன்று கட்டுதல் ஆகிய திட்டங்கள் மைய அரசின் உதவியுடன், ஒவ்வொரு திட்டமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.5 கோடிக்கு மிகாமல் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும்.

# கலை பண்பாட்டுத்துறை

# அறிவிப்புகள்
# 2011–2012

22. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோயம்புத்தூர், திருவையாறு அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் திருநெல்வேலி கலை பண்பாட்டு மையம் ஆகியவற்றிற்கு கட்டிடம் ரூ.2.60 கோடி செலவில் கட்டப்படும்.

23. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாணவர் பயன்பாட்டிற்காக அரசு இசைக் கல்லூரிகளுக்கும், கவின் கலைக்கல்லூரிகளுக்கும், கட்டிட மற்றும் சிற்ப கலைக் கல்லூரிக்கும், துறைக்கும் தேவையான தளவாட பொருட்கள் ரூ.39.65 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

24. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டங்களில் கலைவிழாக்கள் நடத்தவும் கலை நிகழ்ச்சிகளை ஆவணமாக்கு வதற்கான சாதனங்கள் வாங்கவும் ரூ.33.40 இலட்சம் செலவிடப்படும்.

25. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/– நிதியுதவி வழங்கப்படும்.

26. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இசைக் கல்லூரி மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவது போல் மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.200/–வீதம் படிப்பு உதவித்தொகை வழங்கப்படும்.

# அருங்காட்சியகங்கள் துறை

# அறிவிப்புகள்
# 2011–2012

27. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அருங்காட்சியகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு தேவையான தளவாடப் பொருட்கள் ரூ.72.12 இலட்சம் செலவில் வாங்கி நவீனப்படுத்தப்படும்.

28. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடமாடும் அருங்காட்சியகம் மற்றும் சிறுவர் அருங்காட்சியகத்தில் முப்பரிமாண திரையரங்கம் ரூ.75 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

# தொல்லியல் துறை

# அறிவிப்புகள்
# 2011–2012

29. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மதுரை, திருமலை நாயக்கர் அரண்மனையிலும், தரங்கம்பாடி, தேனிசு கோட்டையிலும் ரூ. 15.50 இலட்சம் செலவில் இடிதாங்கிகள் அமைக்கப்படும்.

30. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொல்லியல் சின்னங்களை பாதுகாக்கவும் பணிகளை ஆவணப்படுத்தவும் ஆறு டிஜிட்டல் கேமராக்கள் உபகரணங்கள் மற்றும் தீயணைப்புக் கருவிகள் ரூ.7.20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

31. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நவீனமயமான புதிய வடிவத்தில் வலைதளம் ரூ.28 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

32. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஆலம்பாறை கோட்டையில் தொல்லியல் அகழாய்வு ரூ.2.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

33. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டு தொகுதி III மற்றும் திருப்பூர் மாவட்ட கல்வெட்டு நூல்கள் ரூ.1.35 இலட்சம் செலவில் வெளியிடப்படும்.

34. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மரபுச் சின்னங்களை முழுமையாக பாதுகாத்திடவும், பராமரிப்பதை உறுதிப்படுத்தும் முகமாக "தமிழ்நாடு மரபு ஆணையச் சட்டம்" ஏற்படுத்தப்படும்.

******